# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2009 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க,
## பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டம்

---

*(2009 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 07 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2009, ஒற்றோபர் மாதம் 09 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 3.50** **தபாற் செலவு : ரூபா 5.00**

**2009 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டம்**

[2009 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 07 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ. ஓ. 49/2007

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும்.*

**1**. இச்சட்டம் 2009 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப் படலாமென்பதுடன், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கச் சட்டத்தின் 48 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**2**. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 48 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1அ) என்னும் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் பந்திகள் (ஆ), (இ) மற்றும் (ஈ) என்பவற்றை நீக்கிவிட்டு அவற்றிற்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

"(ஆ) பீடத்தின் கற்கைத்துறையில் அடங்கியுள்ள எல்லா நிரந்தரமான சிரேட்ட பேராசிரியர்களும், பேராசிரியர்களும், இணைப் பேராசிரியர்களும், சிரேட்ட விரிவுரையாளர்களும் மற்றும் விரிவுரையாளர்களும் ;

(இ) பீடத்தின் விரிவுரையாளர்களால் (தகுதிகாண்நிலை) அத்தகைய விரிவுரையாளர்களிடையேயிருந்து தெரிவுசெய்யப்பட்ட இரண்டு உறுப்பினர்கள் ;

(ஈ) அத்தகைய பணியாட்டொகுதியின் உறுப்பினர்களிடையேயிருந்து தெரிவுசெய்யப்பட்டவர்களும், பந்திகள் (ஆ) மற்றும் (இ)என்பவற்றில் குறிப்பீடு செய்யப்பட்டவர்கள் அல்லாதவர்களுமான, அறிவுறுத்தல்களை வழங்குகின்ற, பீடத்தைச் சார்ந்த நிரந்தரமான பணியாட்டொகுதி யின் இரண்டு உறுப்பினர்கள்;".

2-PL 004221 - 1,190 (2009/07)

முதன்மைச் சட்டவாக்கத்தின் 71 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 71 ஆம் பிரிவு அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (ii) ஆம் பந்தியை நீக்கி விட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

"(ii) காலத்துக்குக்காலம் ஆக்கப்பட்ட விதிகளால் ஆணைக் குழுவால் தீர்மானிக்கப்படவேண்டியவாறான சம்பளக்கோவையை அல்லது ஆகக்குறைந்த சம்பளப் புள்ளியைக்கொண்ட, ஆசிரியர் பதவி அல்லாத, ஒரு பதவிக்கான நியமனம் :

ஆயின், ஆணைக்குழுவானது மேற்குறித்த பதவிகளின் நியமனங்களுக்கான விதப்புரையை அனுப்பிவைக்குமாறு, அதன்சார்பாக ஆக்கப்பட்ட விதிகளினால் ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப் பட்ட நடவடிக்கைமுறைக்கிணங்க அந்த அந்த உயர் கல்வி நிறுவனங்களைத் தேவைப்படுத்தலாம். அத்தகைய விதப்புரையைப் பெற்றதன்மீது ஆணைக் குழு அவசியமான நியமனங்களைச் செய்தல் வேண்டும் ; அத்துடன்."

முதன்மைச் சட்டவாக்கத்தின் 72 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 72 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவுக்கான காப்புவாசகத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் காப்புவாசகத்தை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :-

"ஆயின், நியமனமானது :-

(அ) ஆசிரியர் பதவியொன்றிற்கான நியமனமாக இருக்கின்றவிடத்தும் மற்றும் நியமிக்கப்பட்டவர் வேறோர் உயர்கல்வி நிறுவனத்தில் அல்லது நியமிக்கப்பட்டவர் சார்ந்திருக்கும் உயர்கல்வி நிறுவனத்தின் வேறோர் திணைக்களத்தில் ஆசிரியர் பதவியொன்றில் முன்னரே உறுதிப்படுத்தப்பட்டுள்ள வராக இருக்கின்றவிடத்தும், அத்தகைய நியமனம் முதற்கண் ஓராண்டு காலத்துக்கான தகுதிகாண் நிலையிலிருத்தல் வேண்டும் ; அல்லது

(ஆ) ஆசிரியர் பதவியொன்றிற்கான நியமனமாக இருக்கின்றவிடத்தும் மற்றும் நியமிக்கப்பட்டவர் வேறோர் உயர்கல்வி நிறுவனத்தில் அல்லது

நியமிக்கப்பட்டவர் சார்ந்திருக்கும் உயர்கல்வி நிறுவனத்தின் வேறோர் திணைக்களத்தில் ஆசிரியர் பதவிக்கு சமனான ஏதேனும் பதவியொன்றில் முன்னரே உறுதிப்படுத்தப்பட்டுள்ளவராக இருக்கின்ற விடத்தும், அத்தகைய நியமனம் முதற்கண் ஓராண்டு காலத்துக்கான தகுதிகாண் நிலையிலிருத்தல் வேண்டும்.".

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 75 ஆம் பிரிவு "ஆசிரியர் அல்லாத வேறு ஏதேனும் பதவிவகிப்பவர்" என்பதிலிருந்து "ஓய்வுபெற்றுள்ளவராகக் கருதப்படுதலும் வேண்டும்:" என்பது வரையான எல்லாச் சொற்களுக்கும் பதிலாகப் பின்வரும் சொற்களை இடுதல்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :- *முதன்மைச் சட்டவாக்கத்தின் 75 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

"ஆசிரியர் பதவியல்லாத வேறு ஏதேனும் பதவியை வகிப்பவர், அத்தகைய அலுவலரின் ஓய்வுபெறுவதற்கான விருப்பத்தெரிவு வயதிற்கு, அதாவது ஐம்பத்தைந்து வயதிற்கு, அப்பாலும் பதவியில் தொடர்ந்திருத்தலும் வேண்டுமென்பதுடன், ஐம்பத்தேழாம் வயதை எய்தும்வரையில் சேவையிலிருத்தலும் வேண்டும். அத்துடன், அதன்பின்னர் அவர் சேவையிலிருந்து தன்னிச்சையாக ஓய்வுபெற்றுள்ளவராகக் கருதப்படுதலும் வேண்டும்:".

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 147 ஆம் பிரிவு "ஆசிரியர்" என்னும் சொல்லுக்கான வரைவிலக்கணத்திற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :- *முதன்மைச் சட்டவாக்கத்தின் 147 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

"ஆசிரியர்" என்பது ஒரு சிரேட்ட பேராசிரியர், பேராசிரியர், இணைப் பேராசிரியர், சிரேட்ட விரிவுரையாளர் தரம் I, சிரேட்ட விரிவுரையாளர் தரம் II, விரிவுரையாளர் மற்றும் விரிவுரையாளர் (தகுதிகாண்நிலை) ஆகியவர்களும் மற்றும் எந்தப் பதவியை வகிப்பவர் ஓர் ஆசிரியரெனக் கட்டளைச் சட்டத்தால் வெளிப்படுத்தப்பட்டுள்ளாரோ அந்தப் பதவியெதனையும் வகிப்பவரும் எனப் பொருள்படும் ; அத்துடன்".

**7**. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். *ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்